# தூது இலக்கியங்கள்

## தொகுதி - 2



மெய்யப்பன் பதிப்பகம்

பதிப்பாசிரியர்

**போ. கார்த்திகா**

முதல் பதிப்பு : டிசம்பர், 2015

திருவள்ளுவர் ஆண்டு : 2046

உரிமை : ஆசிரியர்க்கு

**விலை : ரூ. 175.00**

மெய்யப்பன் பதிப்பக வெளியீட்டு எண் : 574

நினைவில் வாழும்

நிறுவனர்



**ச. மெய்யப்பனார்**

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

**'வள்ளுவம்'** இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

**'பதிப்புச் செம்மல்'** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

*கிடைக்குமிடங்கள்:*

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேலச் சன்னதி, சிதம்பரம் - 608001. ✆:04144-230069

31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600108. ✆:044-25361039

6, சிவஞானம் தெரு, தி. நகர், சென்னை - 600017. ✆:044-24357832

110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625001. ✆:0452-2622853

15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641001. ✆:0422-2397155

296/134, செரி சாலை, சேலம் - 636007. ✆:0427-4030709

28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620002. ✆:0431-2706450

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை – 600 021,

தொலைபேசி : 25954528

42. தொல்காப்பியத்தில் தூது செல்லும் வாயில்கள்

- **இர. ரேச்சல் மேனகா** - 252

43. ஸ்ரீசிவஞானபாலய தேசிகர் நெஞ்சுவிடுதூது- **நா. ரேணுகா** - 256

44. சிவபெருமானின் சிறப்புகள் கண்ணாடி

தூதின் வழி - **பி. ராஜலெட்சுமி** - 262

45. தூது சொல்லும் செய்திகள் - **க. லதா** - 266

46. ஐங்குறுநூற்றில் தூது - **பா. வசந்தி** - 274

47. மான்விடு தூது ஒரு மதிப்பீடு - **வ. வள்ளியம்மாள்** - 278

48. கண்ணாடிவிடுதூதில் ஒரு பொருள் பல்பெயர் - **க. வனிதா** - 284

49. தமிழில் தூது இலக்கியம் - **சு. வஜ்ரவேலு** - 288

50. அன்னச்சேவல், அன்னச்சேவல்

தூது செய்யுளா? - **வாணிஅறிவாளன்** - 296

51. தூது இலக்கியத்தில் பாரதியின் சீட்டுக்கவியில் சில சிந்தனைகள்

- **வை. வாசுதேவன்** - 300

52. ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடுதூது - **ஆ. விஜயராணி** - 304

53. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் தூது - **ச. விஜயலெட்சுமி** - 309

54. குறள் விடுதூது புலப்படுத்தும் இல்வாழ்க்கை - **த. விஜயலெட்சுமி** - 314

55. புகையிலை விடு தூது - **பி. கா. வீரவராசா** - 317

56. மஞ்சள் விடுதூது - **பா. வேலம்மாள்** - 324

57. அழகர் கிள்ளை விடு தூது - **பொன். வேலுமயில்** - 332

58. முத்திருளாண்டவர் முகில்விடு தூது காட்டும்

முகிலின் சிறப்பு - **ஜா. ஜ்லிபிரதிபா** - 338

59. அகநானூற்றுத் தலைவன் நெஞ்சோடு கிளத்தல்

பாடல்களில் தூதுக்கூறுகள் - **சை. ஜெஸிமா** - 343

## ஸ்ரீ சிவஞானபாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது

நா. ரேணுகா

நெடிய வரலாற்றைக் கொண்ட தமிழின் இலக்கணத்தை எடுத்துரைக்கும், நமக்குக் கிடைக்கின்ற முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் தம் காலத்து வழக்கிலிருந்த இலக்கியங்களுக்கு இலக்கணம் வகுத்ததுடன் 'விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே' எனப் புதுவகை இலக்கியங்கள் தோற்றம் கொள்வதற்கும் வரையறை செய்கிறது. அவ்வகையில், சங்க காலத்தில் கருக்கொண்டு வளர்ந்த சிற்றிலக்கியங்கள் பக்தி இலக்கியக் காலத்தில் வளர்ச்சியடையத் தொடங்கின. கி.பி.9ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் சிற்றிலக்கியங்களுள் சிறந்த பிரிவுகளாய் எண்ணத்தக்க கலம்பகம், பரணி, பிள்ளைத்தமிழ், தூது முதலிய நூல்கள் தோன்றின. கி.பி.12ஆம் நூற்றாண்டில் செல்வாக்குப் பெறத் தொடங்கிய சிற்றிலக்கியங்கள் கி.பி.19ஆம் நூற்றாண்டு வரையில் பல்கிப் பெருகின. இக்காலக் கட்டத்தை 'சிற்றிலக்கியங்களின் பொற்காலம்' என்றுரைப்பர்.

சிற்றிலக்கியங்கள் தோற்றம் கொண்ட பின்னரே கடவுள், பேரரசர் மட்டுமின்றி குறுநில மன்னர்களும் வள்ளல்களும் அருளாளர்களும் ஞானியர்களும் பாட்டுடைத் தலைவர்களாக உலாவரத் தொடங்கினர். கி.பி.14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்புலவர்களின் சிற்றிலக்கிய முயற்சி சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கையைப் பெருகச் செய்தன. பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிய பழமரபு கல்விச்சூழல் சிற்றிலக்கிய நூல்களைத் தமிழ்ச்சூழலில் நிலைபெறச் செய்தன.

### சிற்றிலக்கியம் - சொல்லும் வகையும்

பிற்காலத்தில் எழுந்த சிற்றிலக்கியங்கள் 'பிரபந்தங்கள்' என வழங்கப்பட்டன. பிரபந்தம் என்பதற்கு நன்றாகக் கட்டப்பட்ட நூல் என்று பொருள். இவ்விலக்கியங்களைச் 'சிறுபிரபந்தங்கள்' என்றும் 'சில்லறைப் பிரபந்தங்கள்' என்றும் குறிப்பிட்டனர். பின்னாளில்தான் 'சிற்றிலக்கியங்கள்' எனக் குறிப்பிட்டனர்.

---

முனைவர் நா. ரேணுகா
உதவிப்பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி
மதுரை